# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.558/2004

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 12.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராஜகோபால் Father's Name : சிங்காரம்

துவக்க நேரம்: 02.52 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

17. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.த.சா.ஆ.13-வது எனது வழக்கறிஞர்களான திரு. எல். முத்துசாமி, திருமதி.புவனா ஆகியோர்களால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேறபடி ஆவணத்தில் கேட்கப்பட்ட 5வது கேள்விக்கு நாவக்குறிச்சி கிராமத்தில் அருள்மிகு நைனபூர்வ பெருமாள் மற்றும் கம்பம்பெருமாள் திருக்கோவில், அருள்மிகு வைத்திநாதர் சுவாமி திருக்கோவில், அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோவில், அருள்மிகு விநாயகர் திருக்கோவில் ஆகிய நான்கு திருக்கோவில்களும், அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலின் செயல் அலுவலரால் தக்கார் என்ற முறையில் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது என பதில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அருள்மிகுஐய்யனார் திருக்கோவில், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், அருள்மிகு எல்லைகாளியம்மன் திருக்கோவில் ஆகிய மூன்று திருக்கோவில்களும், அருள்மிகு சிதம்பரவேஸ்வரர் கோவில் செயல் அலுவலர்களால் தக்கார் என்ற முறையில் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது என பதில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.558/2004, Dt.12.02.2026.

18. மேற்படி ஆவணத்தில் அருள்மிகு முத்தையா கோவிலும், மலையம்மன் கோவிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் மலையம்மன் கோவிலும், பிடாரியம்மன் கோவிலும் ஒன்றுதான் என்பதால் மலையம்மன் கோவிலை குறிப்பிடப்படவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் மலையம்மன் கோவிலும், பிடாரியம்மன் கோவிலும் தனிதனி கோவில்கள் என்றால் சரியல்ல, இரண்டும் ஒன்றுதான்.

19. தாவா வழக்குரையில் வழக்கு சொத்து விவரத்தில் மலையம்மன் கோவிலும், பிடாரியம்மன் கோவிலும் தனிதனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் அது தவறாக போட்டிருக்கலாம் ஆனால் இரண்டும் ஒரே கோவில்தான். முத்தையா (எ) வடகரையம்மன் கோவிலும், மலையம்மன் கோவிலும் நாவக்குறிச்சி கிராம ஊராளி கவுண்டர் சமூகத்துக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட கோவில் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து விவரத்திற்கு மாறாக தற்பொழுது நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனவே எனது சாட்சியம் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல.

20. தாவா கோவில் தொடர்பாக எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட W.P.7856/2023 என்ற மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் விசாரண நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறி தள்ளுபடி செய்யப்பட்டார்கள். நான் சொல்வது போல் அந்த உத்தரவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதன்பின்னர் W.P.39980/2024 என்ற ரிட் மனுவினை தாக்கல் செய்தோம் என்றாலும் மேற்படி மனுவானது இதுபோன்று பரிகாரங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தால் கொடுக்க முடியாது என்று கூறி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் மாவட்ட ஆட்சியரிடமும், இந்து அறநிலையத்துறையிலும் மனு தாக்கல் செய்யப்பட்டு பரிகாரம் தேடி கொள்ள வேண்டி தள்ளுபடி செய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் உயர்நீதிமன்றத்தின் உத்திரவு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

21. பிரதிவாதிகள் முத்தையா (எ) வடகரையான் கோவிலும், மலையம்மன் கோவிலும் காலம் காலமாக தொன்றுதொட்டு ஊராளி கவுண்டர் சமூகத்தால் விழாக்களும், புனரமைப்பு, கும்பாபிஷேகளும் நடத்தப்பட்டு வருகிறது என்றாலும் சரியல்ல, அதுபோல் எந்த விழாக்களும் நடத்தப்படவில்லை. அதேபோல், இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள தாவா மற்ற 7 கோவில்களிலும் ஊராளி சமூகத்தை சேர்ந்த 5 நாட்டாமைகளும் அவரது வகையறாக்களும்தான் நாளாதுவரை நிர்வகித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

22. தாவா கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறுவதை வாதிகளாகிய நாங்கள்தான் வழக்குகளும், ரிட் மனுக்களும் தாக்கல் செய்து திருவிழாக்கள் நடைபெறாத வண்ணம் இடையுறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. ஊர்பொது மக்களின் அமைதியை குலைக்கும் வண்ணம் நாங்களும் எனது முன்னோர்களும் செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல.

23. எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் தாவா கோவில் தொடர்பாக அ.வ.எண்.678/1987 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செயல்படத்தாமல் தற்பொழுது அதே கோவில்கள் தொடர்பாக அதே பரிகாரத்திற்காக மீண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, அதில் கேட்கப்பட்ட பரிகாரம் வேறு, இந்த வழக்கில் கேட்கப்பட்ட பரிகாரம் வேறு. தவறான சங்கதிகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 03.17 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.558/2004, Dt.12.02.2026.